செ. கு. எண்: 84 நாள்: 01.06.2018

**காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை 1.6.2018 அன்று மத்திய அரசு அமைத்து அரசிதழில் வெளியிட்டது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை.**

----

மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகம், காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை அமைத்து, அதை மத்திய அரசின் அரசிதழில் இன்று (1.6.2018) வெளியிட்டுள்ளது. இது மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மாவின் அரசிற்கும் தமிழ்நாட்டு விவசாய பெருங்குடி மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

தமிழ்நாட்டின் விவசாயத்திற்கு ஆதாரமாக விளங்கும் காவேரி நதி நீரை பகிர்ந்து கொள்வது பல ஆண்டுகளாகவும், குறிப்பாக 1970ஆம் ஆண்டிலிருந்தும் தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கும் இடையேயுள்ள நீண்ட நாள் பிரச்சனை ஆகும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா வழியில் செயல்பட்டுவரும் மாண்புமிகு அம்மாவின் அரசும், காவேரி நதிநீர் பிரச்சனையை திறம்படக் கையாண்டு தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை பேணி பாதுகாத்து வருகின்றனர்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும், சட்டப் போராட்டத்தினாலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் **19.2.2013** அன்று வெளியிடப்பட்டு செயலாக்கத்திற்கு வந்தது.

**காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் கொண்டு வந்ததுதான் தன்னுடைய 30 ஆண்டுகால அரசியல் வாழ்வில், தான் செய்த சாதனைகளில் முதன்மையானதாக கருதுவதாகவும், தான் பல ஆண்டுகள் பொது வாழ்வில் இருந்து கஷ்டப்பட்டதற்கு இந்த வெற்றிதான் தனக்கு முழு நிறைவைத் தந்திருக்கிறது என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்பில் மனம் நெகிழ்ந்து பேசினார்கள் என்பதைக் கொண்டு காவேரி நதிநீர் பிரச்சனையில் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இருந்த உள்ளார்ந்த அக்கறையும் ஈடுபாடும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாக புரிந்தது. விவசாயிகளின் உரிமையை நிலைநாட்ட மெரினா கடற்கரையில் தொடர்ந்து 80 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்து போராடிய மாண்புமிகு அம்மா அவர்களின் தியாகம் இத்தருணத்தில் நினைவு கூறத்தக்கதாகும்.**

உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த சிவில் மேல்முறையீட்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டு **16.2.2018** அன்று இறுதியாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பில், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இறுதி ஆணை மற்றும் அதனை மாற்றியமைத்த உச்ச நீதிமன்றத்தின் **16.2.2018** அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி ஒரு செயலாக்க திட்டத்தை மத்திய அரசு **6** வார காலத்திற்குள் அமைக்க வேண்டுமெனவும், காலக்கெடு ஏதும் நீட்டிக்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் நேரிலும் மற்றும் கடிதங்கள் வாயிலாகவும் இவ்வமைப்புகளை உடன் அமைக்க வலியுறுத்தினேன். பாராளுமன்ற கூட்டத் தொடர் **5.3.2018** அன்று தொடங்கி **6.4.2018** வரை நடைபெற்றது. இக்கூட்டத் தொடரில், தமிழ்நாட்டைச் சார்ந்த அஇஅதிமுக பாராளுமன்ற உறுப்பினர்கள் செயலாக்கத் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக அமைக்கக் கோரி தொடர்ந்து வலியுறுத்தியதால் பாராளுமன்ற நடவடிக்கைகள் **22** நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றம் பிறப்பித்த காலக்கெடு முடிவடையும் நிலை இருந்தபோது, **29.3.2018** அன்று மூத்த அமைச்சர்கள், தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர், தலைமைச் செயலாளர்

மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோருடன் தமிழ் நாட்டின் சார்பில் எடுக்கப்பட வேண்டிய மேல்நடவடிக்கை குறித்து நான் விரிவாக விவாதித்தேன். அக்கூட்டத்தில், **நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை மத்திய அரசின் மீது உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்யவேண்டும்** என முடிவெடுக்கப்பட்டு, **31.3.2018** அன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மத்திய அரசின் மீது உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய அரசும் கால அவகாசம் கேட்டு ஒரு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

உச்ச நீதிமன்றம் **14.5.2018** அன்று, மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சக செயலாளர் ஒரு வரைவுத் திட்டத்துடன் நேரில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டது. அதன்படி, **14.5.2018** அன்று, மத்திய அரசின் நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சக செயலாளர், உச்ச நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, மத்திய அரசு தயாரித்துள்ள வரைவு திட்டத்தினை தாக்கல் செய்தார்.

எனது அறிவுரையின் பேரில், **16.5.2018** அன்று தமிழ்நாடு அரசு சார்பாக வாதாடிய மூத்த வழக்கறிஞர்கள் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில், குறிப்பிட்டபடி அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம்

மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைத்து செயல்படுத்த வேண்டும் என தகுந்த ஆதாரங்களுடன் கடுமையாக வாதிட்டனர்.

**இதனை அடுத்து, 18.5.2018 அன்று மத்திய அரசு தாக்கல் செய்த திருத்திய வரைவுத் திட்டத்தின் மீது உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பில், மத்திய அரசு தாக்கல் செய்த திருத்திய வரைவு திட்டம், நடுவர் மன்ற இறுதி ஆணை / கட்டளைகள்படியும், அதனை திருத்தியமைத்து வழங்கிய உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படியும் உள்ளது** எனவும், 1956–ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர்த் தாவா சட்டப்பிரிவு 6A–னை ஒத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. **மேலும், தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்று, காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைமையிடம் புதுடில்லியிலும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவின் தலைமையிடம் பெங்களூருவிலும் செயல்படும் எனவும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைபடுத்தும் குழு ஆகிய அமைப்புகளை அமைத்து, மத்திய அரசிதழில் வெளியிட்டு பருவ மழைக்காலம் துவங்குவதற்கு முன்னர் செயலாக்கத்திற்கு கொண்டுவர வேண்டி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் மத்திய நீர்வள ஆதார அமைச்சர் அவர்களுக்கும் 26.5.2018 அன்று என்னால்

கடிதங்கள் அனுப்பபட்டுள்ளன. இவ்வாறு மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல தொடர் நடவடிக்கைகள் எடுத்ததன் வாயிலாக இன்று (1.6.2018) காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகள் மத்திய அரசால் அமைக்கப்பட்டு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை **19.2.2013** அன்று மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட பிறகு, அதனை சிறப்பாக செயல்படுத்துவதற்கு **மாண்புமிகு அம்மா அவர்கள் மற்றும் அவர் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளாலும் மற்றும் சட்ட போராட்டங்களாலும், உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை சற்று மாற்றியமைத்து 16.2.2018 அன்று பிறப்பித்த தீர்ப்பினை செயல்படுத்துவதற்கு காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைத்து அதனை மத்திய அரசிதழில் 1.6.2018 அன்று வெளியிட்டது, மாண்புமிகு அம்மா அவர்களது வழியில் நடைபெறும் தமிழ்நாடு அரசிற்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இந்த உத்தரவுகளினால், தமிழ்நாட்டின் உரிமைகள் மற்றும் விவசாயப் பெருங்குடிமக்களின்**

**வாழ்வாதாரம் மீட்டு எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இதற்காக பாடுபட்ட அனைவருக்கும் எனது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இணைப்பு :** காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைத்து, **1.6.2018** அன்று மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகம் வெளியிட்ட அரசிதழ்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**